**சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்**

**விடுமுறைக்கால சுயகற்றல் செயலட்டை**

**ஆக்கம் - நிவிதிகல கல்வி வலயம்**

**கணிதம் – தரம் 9**

**காலம் : 2021.06.07 தொடக்கம் 2021.06.13 வரை**

**திங்கட்கிழமை ( 2021.06.07)**

**பாடம் : நேர்கோடுகளுடனும் சமாந்தரக் கோடுகளுடனும் தொடர்புபட்ட கோணங்கள்.**

**பக்கம் 116** இல் தரப்பட்டுள்ள **பயிற்சி 8.3** இல் காணப்படும் அனைத்து பயிற்சிகளையும் உமது பயிற்சிக் கொப்பியில் எழுதி செய்க.

**செவ்வாய்க்கிழமை (2021.06.08)**

**8 .4 சமாந்தரக் கோடுகளுடன் தொடர்புபட்ட கோணங்கள் ...**

என்ற தலைப்பிற்கு கீழ் தரப்பட்டுள்ள மூன்று சந்தர்ப்பங்களையும் நன்கு வாசித்தறிந்து தரப்பட்டுள்ள செயற்பாடு 1, செயற்பாடு 2, செயற்பாடு 3, ஆகியவற்றை படங்களுடன் உமது பயிற்சிக் கொப்பியில் எழுதிக் கொள்க.

**புதன்கிழமை (2021.06.09)**

**பக்கம் 119** இல் தரப்பட்டுள்ள

- தேற்றம் -: இரு நேர்கோடுகள் ஒரு குறுக்கோடியினால் இடை வெட்டப்படும் போது உண்டாகும்
    - **ஒத்த கோணங்கள் சமனாகும்** போது அல்லது
    - **ஒன்றுவிட்ட கோணங்கள் சமன்** ஆகும்போது அல்லது
    - **நேயக் கோணங்களின் கூட்டுத்தொகை 180 $^{o}$** ஆகும்போது அவ்விரு கோடுகளும் சமாந்தரமாகும்.

என்ற தேற்றத்தினை நன்கு வாசித்து விளங்கிக்கொண்டு, **120 ஆம் பக்கத்தில்** தரப்பட்டுள்ள உதாரணம் 1ஐ உமது பயிற்சி கொப்பியில் எழுதிக்கொள்க. அதனைப் பார்க்காமல் மீண்டும் ஒரு முறை செய்துபார்க்க.

**வியாழக்கிழமை (2021.06.10)**

**பக்கம் 120** இல் தரப்பட்டுள்ள சமாந்தர கோடுகளுடன் தொடர்புபட்ட வேறொரு தேற்றத்தினை அறிந்து கொள்வதற்காக அங்கு தரப்பட்டுள்ள செயற்பாடு இரண்டில் படி 1 ,படி 2 ,படி 3 ஆகியவற்றில் தரப்பட்டுள்ளவற்றை உமது பயிற்சி கொப்பியில் எழுதிக் கொள்க.

**வெள்ளிக்கிழமை (2021.06.11)**

**பக்கம் 121** இல் தரப்பட்டுள்ள

- தேற்றம் -: இரு சமாந்தர நேர்கோடுகளை ஒரு குறுக்கோடி இடை வெட்டும்போது உருவாகும்
    - **ஒத்த கோணங்கள் சமம் ஆகும்,**
    - **ஒன்றுவிட்ட கோணங்கள் சமம் ஆகும்,**
    - **நேயக் கோணங்கள் மிகைநிரப்புகின்றன.**

என்ற தேற்றத்தினை நன்கு வாசித்து விளங்கிக் கொண்டு அங்கு தரப்பட்டுள்ள உதாரணத்தினை உமது பயிற்சி கொப்பியில் எழுதிக்கொண்டு அதனை பார்க்காமல் மீண்டும் ஒரு முறை செய்து பார்க்க.

**சனிக்கிழமை(2021.06.12)**

**பக்கம் 122** மற்றும் **123** இல் தரப்பட்டுள்ள **பயிற்சி 8.4** இல் காணப்படும் அனைத்து பயிற்சிகளையும் உமது பயிற்சிக் கொப்பியில் எழுதி செய்க.

**ஞாயிற்றுக்கிழமை(2021.06.13)**

**பக்கம் 124** இல் தரப்பட்டுள்ள பலவினப் பயிற்சிகளை நன்கு வாசித்து உமது பயிற்சிக் கொப்பியில் எழுதி செய்க. அத்தோடு **பக்கம் 125** இல் தரப்பட்டுள்ள பொழிப்பையும் நன்கு வாசித்து கொள்க.